**தொல்காப்பிய மன்றம் - கனடா**

**Association for Tolkappiyam - Canada**

தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்

பிரிவு - 5 (2014 இல் பிறந்தோர்)

# தமிழ்மொழி

நாம் தமிழர். நாம் பேசும் மொழி தமிழ்மொழி. தமிழ் ஒரு செம்மொழி. இன்று, **உலகில் வாழும் மிகப் பழமையான மொழிகளில் முதல் இடத்தில் இருக்கும் மொழி தமிழ்மொழியாகும்.** உலகிலுள்ள மொழிகளுள் **இலக்கணச் சிறப்பும் இலக்கியச் செழுமையும் உள்ள மொழிகளுள் முதன்மையானது தமிழ்மொழி.** திராவிட மொழிகள் 4500 வருடப் பழமை வாய்ந்தவை என்னும் தகவலை உலகம் இன்று ஏற்றுக் கொண்டுள்ளது.

பாண்டிய மன்னர், **சங்கம் அமைத்து**, தமிழ் வளர்த்தார்கள். தமிழ்மொழியின் மிகப் பழமையான நூலான **தொல்காப்பியம்** இரண்டாம் தமிழ்ச்சங்கத்தில் இயற்றப்பட்டதாக அறியப்படுகிறது. தொல்காப்பியத்தின் காலம் **பொது ஆண்டிற்கு முன் 711 ஆம் ஆண்டு**. தொல்காப்பியத்திற்கு முன்னரே தமிழ்மொழி வளம் மிக்க பல இலக்கியங்களைக் கொண்டதாக இருந்திருக்கின்றது. அந் நூல்கள் யாவும் கடல்கோள்களால் அழிந்து போயின.

**தொல்காப்பியம் மட்டுமல்ல, சங்க காலத்தில் எட்டுத் தொகை, பத்துப் பாட்டு** ஆகிய இரு தொகை இலக்கியங்களும் தோன்றின. இவை தமிழ் மொழிக்குச் **செம்மொழித் தகைமையைக் கொடுத்தன.**

**“தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”**

என்னும் உணர்வு மிக்க இப் பாடலைப் பாடியவர் **பாவேந்தர் பாரதிதாசன்.**

**பண்டைக் காலத்தில் மட்டுமல்ல, தமிழ்மொழி, இன்றும் பேசும் மொழியாகவே இருப்பது அதன் தனித்தன்மையாகும். கணனித் தொடர்புகளுக்கும் இசைவான மொழியாகத் தமிழ்மொழி விளங்குகின்றது.**

உயிர் பன்னிரெண்டும், மெய் பதினெட்டுமாக, தமிழில், **முதல் எழுத்துக்கள்** முப்பது. மெய்யோடு, உயிர் கலந்து வரும் உயிர்மெய் எழுத்துக்கள் மொத்தம் 216.

இவற்றோடு, ஆயுத எழுத்து ஒன்றும் சேர, தமிழ் நெடுங்கணக்கில் மொத்தம் 247 எழுத்துக்கள் உள்ளன.

ஒலியின் அடிப்படையில் உயிர் எழுத்துக்கள், குறில், நெடில் என இரு வகைப்படும். மெய் எழுத்துக்கள், வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும்.

தமிழைப் பிழையறக் கற்போம். தமிழ் பேசுகின்ற தமிழராய் வாழ்வோம்.

நன்றி. வணக்கம்